விலை : ரூ. 700/-

ISBN
9 788198 977472

அகல் பதிப்பகம்

பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி [கட்டுரைத் தொகுப்பு]

# பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி

[கட்டுரைத் தொகுப்பு]

பதிப்பாசிரியர்
முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்
முனைவர் ஏ. கோதண்டராமன்

அகல் பதிப்பகம்

Scanned with CamScanner

பதிப்பாண்டு : ஜூலை 2025

# பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி

(கட்டுரைத் தொகுப்பு)

பதிப்பாசிரியர் : முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர் : முனைவர் ஏ.கோதண்டராமன்

* பக்கம் : 744
* அளவு : டெம்மி, 12.5 புள்ளி
* தாள் : என்.எஸ்.புக் பிரிண்ட்
* அச்சு : வசந்தம் அச்சகம், சென்னை.
* நூல் வடிவமைப்பு : சு.ரேகா, கா.பாத்திமா
* அட்டை வடிவமைப்பு : கா.பாத்திமா

வெளியீடு

**அகில் பதிப்பகம்**

நெ. 44/2, நாயக்கமார் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை- 33.

ISBN : 978-81-989774-7-2

விலை : ரூ.700/-

Scanned with CamScanner

# உள்ளடக்கம்

1. சமூக மேம்பாட்டில் தேவாரப் பதிகங்கள்
**- முனைவர் ஏ. கோதண்டராமன்** .................................. 13

2. தமிழ் வளர்ச்சிக்கு ஆழ்வார்களின் பங்களிப்பு
**- முனைவர் வை.கவிதா** .................................. 25

3. சைவம் வளர்த்த தமிழ் **- முனைவர் நா. குமாரி** .................................. 35

4. எட்டயபுர சித்தர்களின் வாழ்வும் வழிபாடுகளும் **- வீ.சௌந்தர்யா** .... 43

5. கிறிஸ்தவமும் தமிழும் **- கி.அபிஷா** .................................. 48

6. சங்க காலத் தமிழரின் வேளாண்மை நுட்பம் **- திருமதி. சு.சுகுணா** ... 55

7. ஆழ்வார் பாசுரங்களில் பிற்கால இலக்கிய செல்நெறிகள்
**- கோ. யோகப்பிரியா** .................................. 62

8. திருமந்திரத்தில் சைவ சமயக் கடவுட் கொள்கைகள்
**- முனைவர் த. கீதாஞ்சலி** .................................. 73

9. சுற்றுச்சூழலியல் வரையறைகள் **- கோ.முத்துலெட்சுமி** .................................. 80

10. திருஞானசம்பந்தர் இலக்கியமும் ஆன்மீகமும்
**-முனைவர் தே. இளங்கோவன்** .................................. 90

11. திருவிவிலியம் கூறும் திரித்துவக் கோட்பாடு
**- முனைவர் ச.க. அருள்பிரகாஷ்** .................................. 94

12. பக்தி இலக்கியத்தில் சமத்துவம் மற்றும் சமூக சீர்திருத்தம்
**- பூ. டில்லிபாபு** .................................. 99

13. மணிவாசகரின் படைப்பில் உவமைகள்
**- முனைவர் அ.கோ. ஸ்ரீதேவி** .................................. 103

14. சித்தரியல் புற்கலம் எனும் உடம்பு: அடியார்க்கு நல்லார்
**- முனைவர் சோ. ராஜலட்சுமி** .................................. 109

15. பாவாணரின் சைவசமயப் பார்வை
**- முனைவர் இரா.பாலகிருஷ்ணன்** .................................. 115

16. பாரதியார் கவிதைகளில் வாய்மொழி மரபுகள் **முனைவர் த.சுபஜா** 121

17. இசைக் கலையும் தமிழர்களும் **- மு.நதிஷா** .................................. 129

Scanned with CamScanner

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரங்கள்

1 இளம்பூரணனார் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம்.

2. டாக்டர். நாராயண வேலுப்பிள்ளை, 17ஆம் பதிப்பு 2021 நாலாயிர திவ்ய பிரபந்தம், மூலமும் தெளிவுரையும், முல்லை நிலையம், சென்னை.

துணைமை ஆதாரங்கள்

1. டாக்டர். கந்தசாமி. சோ. ந. இலக்கியமும் இலக்கிய வகையும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் 608001, முதல் பதிப்பு டிசம்பர் 2005

2. சண்முகம்பிள்ளை மு., சிற்றிலக்கிய வகைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதல் பதிப்பு 2022.

3. டாக்டர். சுப்ரமணியன் ச.வே, தமிழ் இலக்கிய வகையும் வடிவும், சென்னை 600096

4. முனைவர். சுபாஷ்சந்திரபோஸ், தொல்காப்பியம் பொருளதிகாரம் , இயல் பதிப்பகம், தஞ்சாவூர்

5. முனைவர். சீனிவாசன் ம.பெ, ஆழ்வார்களும் தமிழ் மரபும் மெய்யப்பன் பதிப்பகம் முதல் பதிப்பு டிசம்பர் 2016

6. டாக்டர். சீனிவாசன் ம. பெ, திவ்ய பிரபந்த இலக்கிய வகைகள் மெய்யப்பன் தமிழாய்வகம் சிதம்பரம். முதல்பதிப்பு 2001

7. டாக்டர். செயராமன். ந.வீ., சிற்றிலக்கிய திறனாய்வு இலக்கியப் பதிப்பகம், தேனாம்பேட்டை

8. சேனாவரையருரை, தொல்காப்பியம் சொல்லதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18.

9. B. R. புருஷோத்தம நாயுடு ஆசாரிய ஹிருதயம் (மணவாள மாமுனிகள் அருளி செய்த வியாக்கியானத்தின் தமிழாக்கம்).



# திருமந்திரத்தில் சைவ சமயக் கடவுட் கொள்கைகள்

முனைவர் த.கீதாஞ்சலி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
என். ஜி. எம் கல்லூரி, பொள்ளாச்சி.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றுள்ள பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, காப்பிய நூல்கள், சிற்றிலக்கியங்கள் ஆகியவற்றில் வரிவடிவில் சைவ சமயக் கடவுளின் பெயர், வடிவம், தொன்மம், வழிபடும் முறை, வழிபாட்டிற்கான காரணம், பெற்றபயன், வழிபாட்டிற்குரிய தோத்திரங்கள், இறைவன் எழுந்தருளி அருள்பாலிக்கும் கோயில் இலக்கணம், கோயில் வகைகள், அங்குள்ள மூர்த்தம், தீர்த்தச் சிறப்பு, உலகில் உடம்பெடுத்துப் பிறந்த உயிர்கள் இறையருளுக்கு அலைந்து அருள்பெறாது இருப்பதற்கானத் தடைகள், தடைகளை நீக்கும் வழிமுறைகள் எனப் பல கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. திருமூலர் சைவ சமயம் தொடர்பான பல கொள்கைகளை வரிவடிவமாக்கி மிக விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். திருமூலருக்குப் பின்தான் சமயக் குரவர்களும் சந்தான ஆச்சாரியர்களும் தோன்றி சைவ சமயத் தோத்திரங்களையும் மெய்கண்ட சாத்திரங்களையும் அருளினார்கள். சாத்திரங்களில் திருக்களிற்றுப்படியார், திருவுந்தியார் ஆகிய நூல்கள் காலத்தால் முந்தியனவாக உள்ளன. இந்நிலையில் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ள சைவசமயக் கடவுட் கொள்கை களை ஆராய்ந்து கூற ஒரு அடிப்படைப் பிரமாணமொன்று தேவைப்படுகிறது. அதாவது திருமூலர் சைவசமயக் கொள்கை களாகக் குறிப்பிட்டுள்ளவை எவை? அவர் கூறியுள்ள கடவுளது தன்மை எவை என்பன இதற்கு ஒரு அளவாக மறைமலையடிகள் குறிப்பிட்டுள்ள சைவசமயக் கொள்கைகளை முன்னிறுத்தி அதன்வழி திருமூலரது "சைவசமயக் கடவுட் கொள்கைகளை" ஆராய்ந்து கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

Scanned with CamScanner

திருமூலர் கடவுட் கொள்கைகளைக் கூற அன்பு, அறம், இல்வாழ்க்கை, இன்பம், நிலையாமை, கல்வி, கொல்லாமை ஆகியவற்றை விளக்கிக் கூறியுள்ளமை சமயப் பகுப்பு, சமயக் கடவுள் தொடர்பானத் தொன்மங்களைக் கூறி அதன் வழி சிவனது பெருமைகளைக் குறிப்பிட்டுள்ளமை, சிவபூசை, சைவநெறி, சாதிவேறுபாடு, சிவன் உலகிற்காகச் செய்த அருட்செயல்கள், சமயநெறியுணர்வு, நெறிப்படுத்தும் குருவின் பெருமை சைவத்தோடு தொடர்புடைய கடவுட் செய்திகள் ஆகியன திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளன. இந்நிலவுலக வாழ்க்கையில் மக்களெல்லோரும் அடைதற்குரிய உரிய பொருள்களை இன்பம், பொருள், அறம் என்று மூன்றாக வகுத்து அம்மூன்றும் பிரிவின்றிக் கலந்த அன்பினால் ஊடுருவி நிற்றல் வேண்டுமென்பதைக்

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"
- (தொல்,களவியல் சூத்.எண்.1)

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளதாலும், தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

"அன்பின் வழிய துயர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" - (5.80)

என்று அருளிச்செய்தமையும், அவர்களுக்குப் பின் வந்த சைவ சமயாசிரியரும் சைவ நாயன்மாரும் அவர் தமக்குப் பின் வந்த சைவ சமயப் பெரியோர் அனைவரும் அன்பொழுக்கத்திற்கே தலைமை தந்தமையைத் தொடர்புபடுத்தி நோக்குவோமாயின் தொன்று தொட்டு இன்று வரை தமிழ் மக்களின் வாழ்க்கையானது அன்பொழுக்கத்தினையே அச்சாணியாகக் கொண்டு நடைபெறு கிறதென்பதை உணரலாம். இதனைச் சைவசித்தாந்த நூலாகிய திருக்களிற்றுப்படியார்,

"அன்பேஎன் அன்பேயென்றன்பால் அழுதரற்றி
அன்பே யன்பாக அறிவழியும் - அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள்
செய்யுமவை சாற்றும் பழமன்றே தானீ"
- (திருக்களிற்று,பா.55)

என்று குறிப்பிட்டுள்ளது. இதற்கு, "இறைவனை நோக்கிச் செய்யும் வழிபாடுகள் அத்தனையும் உண்மையன்பின் புற நிகழ்ச்சிகளாகச்



செயற்பால்தனை வற்புறுத்தா திற்கின்றது" (பழந்தமிழ் கொள்கையே சைவசமயம். 1.8) என்பதை மறைமலையடிகள் விளக்கந் தந்துள்ளதாலும் உணரலாம்.

இன்ப வாழ்க்கையான இல்லறம், இளமைப்பருவத்தில் ஆண், பெண் என்னும் இருபாலார்க்குத் தோன்றுவதாகிய இன்ப உணர்ச்சியானது அழகு, அறிவு ஆகியவற்றின் அடிப்படையில் நல்லியற்கையினால் உந்தப்பட்டு எழும் அன்பின் வயமாகி ஒருவரையொருவர் இன்றியமையாராய் ஒருங்கப் பொருந்தும் ஆண் பெண் மக்களுக்கு அவ்விழுமிய காதலின்பத்தினை ஊட்டி அவரது வாழ்க்கையைத் தூய்மை செய்து அதனைப் பெரிதும் பயன்படச் செய்வதாகும்.இன்ப அன்பினால் வாழ்க்கை வேண்டுமென்பதைத் திருவள்ளுவரும். உந்தப்பட்டே நடைபெறல்

"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்துஞ் சிறப்பு" (75)

என்றும்,

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று" (78)

என்றும் அன்பின் இன்றியமையாமையினை விளங்க வைத்துள்ளார். மதுரை கடைச்சங்க காலத்துக்கும் முன்னே பண்டைச் செந்தமிழ்க் காலத்திருந்த குன்றம்பூதனார் என்னும் நல்லிசைப் புலவர் முருகவேள் மீது பாடிய, பரிபாடலில்,

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
காதற் காமங் காமத்துப் சிறந்தது"
- (பரிபாடல், பா.9, செவ்வேள், வரி, 12-14)

என்று காதலின்பத்தின் மாட்சி தெரிந்து, அவ்வின்ப நுகர்ச்சி இறைவனது தண்பரங்குன்றத்தின்கண் நிகழுமாற்றின் வைத்து அதனை விரித்துப் பாடியுள்ளார். காதலன்பு என்பது ஓரளவிற்கு இருகோடு தோன்றினாற்போ இருவருயிரும் ஒருயிராய் ஈருடம்பின் நின்று இயையும் பெருகிய தூய் அன்பாகும் என்று மறைமலையடிகள் விளக்கத்தந்துள்ளர். இதனை மாணிக்கவாசகப் பெருமான் திருச்சிற்றம்பலக் கோவையாரில்,

Scanned with CamScanner

"காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந்
தாங்கிருவர் ஆகமத்துள் ஒருயிர் கண்டனம் யாம்இன்றி
யாவையுமாம்
ஏகத் தொருவன் இரும்பொழி லம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கும் ஒன்றாய் வருமின்ப துன்பங்களே
- (திருக்கோவையார். நாணநாட்டம், பா.எ.5)

என்று அருளிச் செய்துள்ளமையாலும் உணரலாம்.

**அன்பொழுக்கம்**

காதலன்பு நிகழுங்காலத்து அது நிகழப்பெறுவார் இருவர் சாதிகுல வேற்றுமை சிறிதும் பாராது அவ்வன்பின் வழியராய்ச் சென்று ஒருங்கு சேர்வரென்பதும், சாதிகுல வேறுபாடுகளையே பார்த்துக் கொண்டு இருமாந்திருக்கும் பொதுமக்கள் தூய காதலன்பு நிகழப் பெறுவதற்குத் தக்காரைக் கண்டுகொள்ள மாட்டுவாரல்லரென்பதும், அருளிரக்கம் வாய்ந்த இறைவனே ஒரோவொருகாற் காதலன்புடையாரை ஒன்று சேர்த்தற் பொருட்டுப் பொதுமக்கள் ஆக்குஞ் சாதிவேற்றுமைக் கட்டுப்பாடுகளை முற்றச் சிதைப்பதென்பதும், தெளியப்படுகின்ற வல்லவேரி காதலன்பு என்பது சைவசமயம் கூறும் நம்பிக்கை. இதனையே தொல்காப்பியம்,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றிஉயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே"
- (தொல்காப்பியம், சூத்.எண்.1039)

என்று குறிப்பிட்டுள்ளார்.

"சொற்பால் அமிழ்திவள் யான்சுவை
யென்னத் துணித்திங்கனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று
நான்இவ ளாம்பகுதிப்
பொற்புஆ ஏறிவார் புலியூர்ப்
புனிதன் பொதியில் வெற்பிற்
கற்பா வியவரை வாய்க்
கடி தோட்ட களவகத்தே"
- (திருக்கோவையார். இயற்கை புணர்ச்சி, பா.எ,8)



என்னும் அருமைத் திருக்கோவையார் செய்யுளாலும் புலனாகிறது. ஆகவே சைவசமயத்தில் பிறந்த ஒவ்வொருவரும் காதலின்ப வாழ்க்கை உலகில் நின்று நிலவுமாறு தம் மக்களை உண்மையன்பின் மனைவாழ்க்கையில் அமரச் செய்து நமது பழந்தமிழ் கொள்கையாகிய சைவசமய நலத்தினை எங்கும் பரப்பி நம் மக்களைப் பழிபாவங்களுக்கு ஆளாக்காது, இளமை தொட்டே அவர்களது உள்ளம் உண்மையன்பில் ஊறி ஒளிரும் வண்ணஞ் செய்தல் பெற்றோர் கடமையாக மறைமலையடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

**கல்வியும் செல்வமே**

தொல்காப்பியர் கல்வியையும் பொருளையும் பெறும் பொருட்டு இளைஞர்கள் வேறுநாடு நோக்கிச் செல்லும் பிரிவுகளில் நூல் ஓதுதற்குப் பிரியும் பிரிவை முன் வைத்துப் பொருள் தேடுதற்குப் பிரியும் பிரிவை அதன்பின் வைத்து "அகத்திணையிய"லிற் (பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம், ப.எ. 35) பிரிவிலக்கணம் வகுத்துரைத்தமையானும் அவர் வழி வந்த திருவள்ளுவரும் அங்ஙனமே "பொருட்பாலிற்" கல்வியை முன் வைத்து அதற்குப் பல அதிகாரங்கள் கடந்து செல்வத்தைப் பின் வைத்துரைத் தமையினையும் நன்கறிகின்றோம். எனவே, ஒருவர்க்கு எஞ்ஞான்றும் அழியாப் பெருஞ் செல்வமாவது தன்னைப் பயின்றாரை எழுபிறப்புந் தொடர்ந்து செல்வதுந் தன்னைத் தொடர்ந்து பயில்வார்க்கு அம்முறையே அவரறிவினை மேலும் மேலும் விளங்கச் செய்வதுஞ் தன்னைப் பயின்றவரையே கண்ணுடை யவராக்கித் தன்னைப் பயிலாதவர் கண்ணைப் புண்ணெனச் செய்வதுங் கல்விச் செல்வமே என்பதைத் திருவள்ளுவர்.

"கேடில் விழுச் செல்வங் கல்வியொருவதற்கு
மாடல்ல மற்றை யவை (குறள். 400)

என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனையே திருமூலர்,

"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாரே
நல்லராம் கல்லாத மூடர் கருத்தறி யாரே"
- (திருமந்.பா.எ.319)

என்று குறிப்பிட்டுள்ளார்.

Scanned with CamScanner

வினையின் நீங்கி' என்ற சூத்திரத்தில் இறைவன் மக்களுக்கு மெய்யுணர்வு தோற்றுவித்தற் பொருட்டு அவர்மேற்சென்ற அருளிரக்கத்தால் முதல் நூல் அருளிச் செய்தானென்று ஆசிரியர் உரைத்தலால் இறைவன் பேரிரக்கமுடையன் என்பதுவும் அவன் முற்காலத்தே தெய்வத்தமிழ் மொழியின் கண் முதலநூல் அருளிச் செய்தமையாலே மற்றை மக்கட் பிரிவினரெல்லாம் முப்பொருளுண்மை அறியாராய் மயங்கி நிற்பத் தமிழ் மக்கள் மட்டும் பண்டு தொட்டு இன்றுகாறும் அவ்வுண்மைகளைத் தெளிய அறிந்து தலை சிறந்து நிற்கின்றார் என்றும் மறைமலையடிகள் குறிப்பிட்டுள்ள கருத்துக்களும், சைவ சமயக் கடவுட் கொள்கையை நன்கு விளக்குகின்றன. பண்டை நாளில் இறைவன் தமிழின்கண் முதல்நூல் அருளிச்செய்து அறம் பொருள் இன்ப வீட்டின் இயல்புகளை விளக்கினமையை மாணிக்கவாசகர்,

"அருந்தவர்க்கு ஆலின்கீழ் அறமுதலா நன்கினையும்
இருந்தவர்க்கு அருளுமது எனக்கறியஇயம்பேடீ
அருந்தவர்க்கு அறமுதல்நான்கு அன்றருளிச் செய்திலனேற்
றிருந்தவர்க்கு உலகியற்கை தெரியாகண் சாழலோ"
- (திருவாசகம்-திருச்சாழல், பா.எ.274)

என்று கூறியிருப்பதிலிருந்தும் உணரலாம். இத்துனை இரக்கமுடையனாகிய இறைவன் சிற்றுயிர்களாகிய நமக்கு அணுக்கனாய் நின்று நாம் செய்யும் வழிபாடுகளை ஏற்றுக் கொள்ளும் உண்மையினைக்

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"
- (தொல் சூத்.1034)

என்னுஞ் சூத்திரத்தால் நம் தெய்வ முதலாசிரியர் தொல்காப்பியர் நன்கு விளக்கியிருக்கின்றார். இதுகாறும் விளக்கியது கொண்டு பல்லாயிர ஆண்டுகட்கு முன்னமே நம் தமிழாசிரியர் தொல்காப்பியர் அறிவுறுத்திய விழுமிய கொள்கைகளே சைவ சமயக் கோட்பாடுகளாய் இன்று காறும் நிலவி வருதல் வெளிப்படையாகப் புலனாகின்றது.



பண்டைக் காலத்துத் தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலான இன்பத்தின் மேற்றான அகப்பொருளினையே மிக விரித்து உரைத்திருப்பதும் அறம் பொருள்களின் மேற்றான புறப்பொருளினைச் சுருக்கியே பாடியிருப்பதும் நன்குணர் வல்லார்க்கே பண்டைத் தமிழாசிரியர் எல்லாரும் இன்பத்துக்கே முதன்மை கொடுத்தமை புலனாகும்.

**துணைநூற்பட்டியல்**

1. அண்ணாமலை. சுப., திருமந்திரம், இந்திய பண்பாடு ஆராய்ச்சி நிறுவனம், திருவான்மியூர் -600 041.
2. திருவாசகம், திருவாவடுதுறை ஆதீனம், 1971.
3. புலியுகேசிகன் தெளிவுரை, தொல்காப்பியம், பாரதி புத்தகாலயம், சென்னை- ஜனவா 2022
4. மாணிக்கவாசக சுவாமிகள், பழந்தமிழ் கொள்கையே சைவ சமயம் சைவ சித்தாந்த நூற்பதிப்பகம், திருநெல்வேலி 1968.

Scanned with CamScanner